# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## C.C. No.320/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தவமுனி | த–பெ | ராஜாங்கம் |
| ஊர்: | : | மதுரை | | |
| வயது: | : | 45/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர். | மாவட்டம் | மதுரை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.02.2026.**

**எதிரிகள் ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் மதுரையில் வசித்து சார்பு ஆய்வாளராக இராமநாதபுரம் நகர காவல் நிலையத்தில் பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு காரைக்குடி வடக்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது 23.02.2015 அன்று காலை 10.00 மணிக்கு காரைக்குடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று உள் நோயாளியாக சிகிக்சையில்இருந்த மீனாட்சி சுந்தரம் என்பவர் அளித்த புகாரை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண். 100/2015 இதச பிரிவுகள், 294(b), 323, 506(ii), ஆகியவற்றின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4**. பின்னர் வழக்கின் சம்பவம் இடம் சென்று 13.00 மணிக்கு சம்பவயிட சாட்சிகள் சந்திரபோஸ் மற்றும் சேது ராஜன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5. பார்வை மகஜர் அ.சா.ஆ.6**. பின்னர் இந்த வழக்கின் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக விசாரணை செய்தேன். பின்னர் இந்த வழக்கின் எதிரிகளை தேடி சென்ற நிலையில் காரைக்குடி பெரியார் சிலை பேருந்து நிறுத்தத்தில் வைத்து 15.00 மணிக்கு எதிரிகள் ஆறுமுகம் மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர்களை குற்ற காரணம் கூறி கைது செய்து நிலையம் அழைத்து வந்து தக்க வழிக்காவல் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இந்த வழக்கின் மற்றொறு எதிரியான ராஜேந்திரன் என்பவரை தேடி சென்ற நிலையத்தில் அவர் மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றம் சிவகங்கையில் முன் ஜாமின் பெற்று விட்ட காரணத்தால் அவரை கைது செய்யவில்லை. பின்னர் இந்த வழக்கில் காயம்பட்ட நபருக்கு சிகிச்சை அளித்த அரசு மருத்துவர் அறிவழகன் அரசு மருத்துவமனை காரைக்குடி என்பவரை விசாரனை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி காய சான்றிதழில் சாதாரன வகையை சேர்ந்தது என்று அவர் கருத்துரை வழங்கியிருந்தார். பட்டியல் சாட்சிகள்

அனைவரையும் விசாரணை செய்து இறுதியாக எதிரிகள் மீது குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் மேற்சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் 20.03.2015 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

குற்ற இறுதி அறிக்கையின் படி வழக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் இடம் NNL பேருந்து பணிமனை அலுவலகம் என்றால் சரிதான். இந்த வழக்கில் NNL பேருந்தின் நிறுவனத்தின் உரிமையாளர் பாண்டியன் என்பவரை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புலன் விசாரணையில் NNL பாண்டி தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கதின் பொருப்பாளர் என்பதை தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 1ம் எதிரி ராஜேந்திரன் என்பவரும் தனியார் பேருந்து ஓட்டுநர் மற்றும் நடத்துநர் சங்கதின் பொருப்பாளர்என்ற விவரத்தையும் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். குற்ற இறுதி அறிக்கையில் அ.சா.1ன் தலையில் கம்பால் அடித்தாக சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி கம்பை கைப்பற்றினேனா என்றால் இல்லை. குற்ற இறுதி அறிக்கையில் எதிரிகள் அனைவரும் அ.சா.1ன் முதலாளியை எங்கள் கையில் தான் சாவு என்று கம்பியை காட்டி மிரட்டி சென்றார்கள் என்று சொல்லியுள்ள நிலையில் மேற்படி கம்பியை கைப்பற்றினேனா என்றால் இல்லை. குற்ற இறுதி அறிக்கையில் சொல்லியுள்ளது போல் குற்ற இறுதி அறிக்கைக்கு ஆதரவாக யாரும் சாட்சியம் அளிக்கவில்லை, நான் அ.சா.1 கொடுத்த புகாரை முறையாக புலன் விசாரணை செய்யாமல் NNL பாண்டி துான்டுதலின் பெயரில் அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்ற இறுதி அறிக்கையில் கூறியது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.02.04 15:21:25 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.